செய்தி வெளியீடு எண்:618 நாள் : 05.12.2015

## செய்தி வெளியீடு

ஆவின் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் பால் பவுடர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில், கடலூர் மாவட்டத்திற்கு 105 மெட்ரிக் டன் பால் பவுடரும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 108 மெட்ரிக் டன் பால் பவுடரும், திருவள்ளூர் மாவட்டத்திற்கு 112 மெட்ரிக் டன் பால் பவுடரும், சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு 75 மெட்ரிக் டன் பால் பவுடரும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நிவாரண முகாம்களில், இந்த பால் பவுடர்கள் அரை கிலோ பாக்கெட்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நேற்றைய தினம், ஆவின் மூலம் 8.20 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் 10.20 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆவின் பால் கிடைப்பதில் சிரமம் இருப்பின் பின்வரும் எண்களை தொடர்பு கொள்ளலாம்: 98403 87510, 98409 07494, 94439 44908. மேலும், நாளை முதல் ஆவின் பால் விநியோகம் முழு அளவினை எட்டும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9